# ஸ்ரீராமாநுஜன் 267



சென்னை ஸத்க்ரந்தப்ரகாசன ஸபா மூலமாக மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. P. B அண்ணங்கராசாரியர்.

1970 ஆம் ௵ முடிவில் ஸ்பெஷல் ஸஞ்சிகை.


## அடியேன் செய்யும் விண்ணப்பம்

மணவாளமாமுனிகளின் அறு நூறாண்டு நிறைவு மஹோத்ஸவம் நமது தென்னாட்டில் மட்டுமன்றிக்கே நாற்றிசையிலும் பரமஸாத்விகமான முறையில் கொண்டாடப் பெற்ற அதிசயம் நாடு நகரமும் நன்கறிந்தது. மாமுனிகளின் திருக்கோலம் திகழாத திவ்ய தேசமில்லை. அத்தகைய ஸகல திவ்ய தேசங்களிலும் திவ்ய தேசங்களோடொப்பப் பரிகணிதங்களான க்ஷேத்திரங்களிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்ற தென்பதை ஒவ்வோரிடத்திலிருந்தும் நமக்குக் கிடைத்துள்ள பெரியார்களின் ஸ்ரீமுகங்களினால் அறிந்து மகிழ்கிறோம். அந்த ஸ்ரீமுகங்களெல்லாம் பெரும்பாலும் ஸ்ரீராமாநுஜனில் வெளியிடப் படவேணுமென்றே நமக்குக் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவகாசக் குறைவினால் இப்போதே வெளியிட இயலவில்லையாயினும் ஸாதாரண வாண்டு முடிவுக்குள் தனிப் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப் பாரித்திருக்கிறோம். இப்போதே வெளியிடாமைக்கு அவரவர்கள் பொறுத்தருள வேணுமென்று பிரார்த்திக்கிறோம்.

ஸ்ரீகாஞ்சியில் தேவப்பெருமாள் ஸந்நிதியிலும் (திருவெஃகா) ஸ்ரீயதோக்தகாரிஸந்நிதியிலும், அட்டபுயகரத்தான், வேளுக்கையாளரி, திருவூரகம், பரமேச்சுரவிண்ணகரம் பாடகம் பச்சைவண்ணம் பவளவண்ணம் திருப்புட்குழி முதலான திவ்யதேசங்களிலும் அவ்வவ்ஸ்தலங்களின் உபபத்திக்கு மிகவுயர்த்தியாகவே மஹோத்ஸவங்களை அபிமானிகள் சிறப்புறவே நடத்திவைத்தார்கள்.

## ஸ்ரீவானமாமலை மடத்திலிருந்து கிடைத்த ஸந்தேசம்




ஸ்ரீமத் பரமஹம்ஸ. (வர்த்தமாந) வானமாமலை ஜீயர்ஸ்வாமி. (இருபத்தேழாவது பட்டம்) ஸ்ரீ சின்ன ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி.

ஸ்ரீமத் பரமஹம்ஸ வானமாமலை ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி (27வது பட்டம்) வர்த்தமாந ஸ்வாமி தமது முதிர்ந்த திருநக்ஷத்திரத்தையும் அதனுல் தமக்கு ஏற்பட்டுள்ள அசக்தியையும் திருவுள்ளத்திற் கொண்டு ஸ்ரீவானமாமலை எம்பெருமான் ஸன்னிதி கைங்கரியங்களையும் வானமாமலை மடம் அரங்கநகரப்பன் ஸன்னிதி கைங்கரியங்களையும், தமது ஆஸ்தானத்திற்கு ஏற்பட்ட ஸ்ரீராமாநுஜ தர்சன ப்ரவர்த்தன கைங்கரியங்களையும் தமக்கு உதவியாகவும் நம்முடைய கண்காணிக்கையிலும் குறைவற நடத்தும் பொருட்டும், தமக்குப் பிறகு அந்த ஆஸ்தானத்தை அலங்கரிக்கும்படியாகவும் ஓர் இளவரசை நியமிக்கத் திருவுள்ளங்கொண்டு நிகழும் ஸாதாரணவாண்டு ஐப்பசிமீ 12உ சித்திரை நக்ஷத்ரம் கூடிய நன்னாளில் (2?—10—1970)

திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில் பலவாண்டுகளாகத் திருவாராதன கைங்கரியம் நடத்திவந்த ஸ்ரீமதுபயவே. வித்வான் கோபால ஐயங்கார்ஸ்வாமியை இளவரசாகத் திருவுள்ளம்பற்றி நியமித்து அபிஷிக்த ராக்கியருளினர். ஜய விஜயீபவ! ஜய விஜயீபவ!



ஸ்ரீமத் பரமஹம்ஸ. (வர்த்தமாந) வானமாமலை ஸ்வாமி மிகத் தளர்ச்சியோடு ஸேவைஸாதிக்கிறபடி. இளவரசு பட்டம் ஸ்ரீகோபாலார்ய ஸ்வாமி திருவடிவாரத்தில் வீற்றிருக்கிறபடி.



மேலே ப்ரஸ்தாவிக்கப்பட்ட ஸ்ரீகோபாலார்ய ஸ்வாமி ஆச்ரம ஸ்வீகாரம் செய்தருளி ஸ்ரீசடகோப ராமாநுஜ ஜீயர்ஸ்வாமியாய் ஸேவை ஸாதிக்கிற திருவோலக்கம். ஸ்ரீ ஸ்வாமிகள் இரு திருநாமங்களும்

• வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே. •

# இளவரசு பட்டாபிஷேகம்பெற்ற ஸ்வாமியினுடைய பூர்வாச்ரம வைபவம் வருமாறு

(தென் திருப்பேரை, ஸ்ரீ. ராமாநுஜய்யங்கார்)

ஸ்ரீ ஸ்வாமி நாச்சியார் திருமாளிகையென்னும் ஸ்ரீவில்லிபுத்தூரை யடுத்த வடகரை யக்ரஹாரத்தில் ஸ்ரீ அழகியசிங்கருக்கும் செங்கமல நாச்சியாருக்கும் திருக்குமாரராக ப்லவஙூ சித்திரைத் திங்களில் அச்வினீ நக்ஷத்திரத்தில் அவதரித்தார். உசித காலங்களில் ஜாதகர்மாதி ஸம்ஸ்காரங்களைப் பெற்று உபநீதராகி வித்யாப்யாஸத்திற்காகத் திருவரங்கம் பெரியகோயிலுக்கு எழுந்தருளி அங்கு கீர்த்திமூர்த்தியான சிங்கமையங்கார் ஸ்வாமியின் கலாசாலையில் கல்விபயிலத் தொடங்கி திவ்யப்ரபந்தங்களையும் உபயுக்த வேதபாகங்களையும் காவ்ய நாடகாலங்கார சாஸ்த்ரங்களையும் எட்டு ஸம்வத்ஸரகாலம் பயின்று தேர்ச்சிபெற்றார். பத்தொன்பதாவது திருநக்ஷத்திரத்தில் ஸ்வக்ராமத்திற்குத் திரும்ப எழுந்தருளினர். அப்போது திருத்தகப்பனார் பரமபதிக்க, அவருடைய சரமகைங்கரியங்களை முடித்து இருபதாவது திருநக்ஷத்திரத்தில் க்ருஹஸ்தாச்ரமத்தை ஸ்வீகரித்து ஆச்ரயணார்த்தமாக வானமாமலைக்கு எழுந்தருளி ஸ்ரீமத் சின்னகலியன் ஸ்வாமி திருவடிகளில் ஆச்ரயிக்க, ஸ்ரீஸ்வாமியும் அருள்புரிந்த சிந்தைகொண்டு பஞ்சஸம்ஸ்காரத்தையும் சாற்றுமுறை க்ரந்தாந்வயங்களையும் அநுக்ரஹித்து, தம் திருவடிவாரத்திலேயே பல மாதங்கள் இருக்கும்படி நியமித்தருளி விசேஷார்த்தங்களை யெல்லாம் உபதேசித்து அந்தரங்க கைங்கரியங்களையுங் கொண்டு ஸ்வக்ராமமான வடகரையிலுள்ள வானமாமலை மடத்தில் எழுந்தருளியுள்ள அரங்கநகரப்பனுக்குத் திருவாராதனம் ஸமர்ப்பித்துப் போகும்படி நியமித்தருளி விடை கொடுத்தனுப்ப ஸ்ரீஸ்வாமியும் அப்படியே ஸ்வகிராமத்திற் கெழுந்தருளி ஆசார்ய நியமனத்தை நடத்திக்கொண்டிருந்தார். அக்காலத்தில் ஸ்ரீகாஞ்சியில் உவே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்யஸ்வாமி தம்முடைய வேத வேதாந்த வைஜயந்தீ பாடசாலையில் நடத்திவந்த நவராத்ரி ஸதஸ்ஸில் பரீக்ஷா விளம்பரங்களைக் கடாக்ஷித்த ஸ்வாமி அந்தப் பரீக்ஷையில் அந்வயிக்கத் திருவுள்ளம்பற்றி அங்கேற எழுந்தருளி திவ்யப்ரபந்த ரஹஸ்ய ஸ்தோத்ராதிகளில் பரீக்ஷை கொடுத்துத் தேறி உத்தமஸந்மானம்பெற்று அதுமுதலாக அந்த ஸ்வாமியின் விசேஷ ப்ரீதிக்குப் பாத்ரபூதராயிருந்து வருகிறார்.

## — மறுபடியும் கோயில்வாஸம் —

கோயிலில் முன்பு ஸ்வாமி வித்யாப்யாஸம் செய்திருந்த பாடசாலையின் தலைவர் அப்பாடசாலைக்கு திவ்யப்ரபந்த உபாத்யாய பதவியை யளிக்க விரும்பிப் பத்திரிகை யனுப்ப, ஸ்ரீஸ்வாமியும் அதற்கு இசைந்து அங்கே யெழுந்தருளி உபாத்யாய பதவியை அலங்கரித்தார். ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியிலும் அத்யாபக கைங்கர்ய நிஷ்ணாதரா யிருந்துவந்தார். அக்காலத்தில் அந்த பாடசாலையில் ஸ்ரீமதுபயவே. காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி உபயவேதாந்த க்ரந்த காலக்ஷேபம் ஸாதித்துவர, அதிலும் ஸ்ரீஸ்வாமி அந்வயித்து ஐந்து ஸம்வத்ஸர

காலம் அவிச்சன்னமாகக் கேட்டருளினர். அச்சமயம் ஸ்ரீஸ்வாமியை ஸ்ரீரங்கம் வானமாமலை மடத்தில் ஸ்ரீகார்ய துரந்தரராயிருக்கும்படி நியமனம் வர, அதை சிரஸாவஹித்திருந்து இப்படியாக 15 ஸம்வத்ஸரம் ஸ்ரீரங்கவாஸ நிரதாயிருந்தார்.


## — திருவல்லிக்கேணி வாஸம் —

பிறகு திருவல்லிக்கேணி வானமாமலை மடத்தில், ஸ்ரீகார்யம் திருவாராதன கைங்கர்யம் பார்க்கும்படி நியமனம் வர, அதை சிரஸாவஹித்து திருவல்லிக் கேணிக்கு எழுந்தருளி, கைங்கர்ய ஸ்ரீயைப் பெற்றார். அங்விடத்தும் ஸ்ரீபார்த்த ஸாரதி ஸந்நிதியில் அத்யாபக கைங்கர்யம் லபிக்கப்பெற்று 30 வஷங்கள் அவிச் சின்னமாக கோஷ்டிகளில் அந்வயித்து வந்தார். சூடிக்கொடுத்த நாச்சியார் சபை ஆதரவில் ஸ்ரீநிவாஸப் பெருமாள், ஸுந்தரராஜப் பெருமாள் ஸந்நிதிகளில் நித்ய மாகவே 15 வருஷங்களுக்கு மேலாக புராண, திவ்யப்ரபந்த, ரஹஸ்யார்த்த ப்ரவசனமும் செய்துவந்தார். ஸ்ரீ M. O. பார்த்தசாரதி ஐயங்கார் சாரிடி ஆதரவில் ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் ஸந்நிதியிலும், ஸ்ரீவானமாமலை மடத்திலும் உபந்ய சித்துப் பல க்ரந்த காலக்ஷேபங்களும் சாற்றுமுறையும் ஸ்ரீஸ்வாமியால் செய்யப் பட்டது. வேத வேதாந்த வர்த்தினி பாடசாலையில் திவ்யப்ரபந்த உபாத்யாயராகப் பணியாற்றிப் பல வித்யார்த்திகளை ஸ்ரீபார்த்தஸாரதி கைங்கர்யத்திலீடுபடுத்தினர்.

## ஸ்ரீவானமாமலை மடம் ஆஸ்தானம் இளவரசுக்கு நியமனம் பெற்றது

இப்பவும் ஸ்ரீமணவாள மாமுனிகளின் 600வது நூற்றாண்டு உத்ஸவத்தை முன்னிட்டு நாச்சியார் திருமாளிகையில் உபன்யாஸம் செய்யும்படி அடியார் குழாங்கள் பிரார்த்திக்க, அதற்கு இசைந்து ஸ்ரீஸ்வாமி நாச்சியார் திருமாளிகைக்கு விடைகொண்டு எழுந்தருளியிருந்த சமயம் ஸ்ரீமத் வானமாமலை ஜீயர்ஸ்வாமியும் ஸ்ரீஸ்வாமியை இளவரசாக நியமிக்கத் திருவுள்ளம் கொண்டு, ப்ருத்யர்கள் மூலமாக நியமனத்தைச் செய்ய ஸ்ரீஸ்வாமியும் ஆசார்ய நியமனத்தை சிரஸா வஹித்து வானமாமலைக்கு எழுந்தருள, ஸ்ரீமத் ஜீயர்ஸ்வாமியும் இவரைக் கடாக்ஷித்து அநுக் ரஹத்துடன் 29—10—70 குருவாரம் ஜோதி நாளில் இளவரசாக அபிஷிக்தராக்கி ஸ்ரீவானமாமலைப் பெருமாள் ஸ்ரீவரமங்கைத் தாயார், அரங்கநகரப்பன் கைங்கர்யத் தில் நியமித்து, தமக்காட்படுத்திக்கொண்டார்.


---




ரம்யஜாமாத்ருயோகீந்த்ரபாதரேகாமயம் ஸதா,
ததாயத்தாத்மஸத்தாதிம் ராமாநுஜமுநிம்பஜே.

ஸ்ரீஸ்வாமிகளிருவரும் நம் மணவாள மாமுனிகளின் திரு வருளால் நீடூழி வாழ்ந்து தர்சன நிர்வாஹம் செய்தருள வேணுமென்று பேரருளாளன் திருவடிகளில் பிரார்த்திக் கின்றேன்.

—P.B.A.



தேவப்பெருமாள் ஸன்னிதி மணவாளமாமுனிகளின்
வெளிக்கொட்டகைப் பந்தலில் டோலோத்ஸவத்தின் காட்சிகள்






Late T. Rangachariar.
(Diwan Bahadur)

சென்னைமாநகரில் மிக ப்ரக்க்யாதி பெற்ற வக்கீல்களில் புகழுடம்புடன் நீடூழி வாழும் பெரியார்களுள் தலைவரானவர் ஸ்ரீஉவே. T. ரங்காசார்யர்ஸ்வாமி இங்கே ஸேவை ஸாதிக்கிறார். இவர் திருநாட்டுக்கெழுந்தருளி 30,35 வருடங்களுக்கு மேல் ஆனாலும் இவருடைய வாக்கு வன்மையினால் மஹோபகாரமடைந்த எண்ணிறந்தவர்கள் இன்னமும் நிச்சலும் சிந்தை செய்பவருளர். ஐம்பது வருஷங்களுக்கு முன்பு ஸ்ரீகாஞ்சீ தேவப்பெருமாள் தேவஸ்தானத்தில் ஹை கோர்ட்டாரால் ட்ரஸ்டு போர்டு ஒன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதில் இந்தப் பெரியார் தென்கலைப்ரமுக ஸ்தானத்தில் (ஸ்கீம் மூலமாக) அமர்ந்து சில பலவாண்டுகள் நிர்வாஹம் செய்து போந்தார். இந்த ஸ்வாமியை ஸ்ரீரங்கம் ரங்காசாரியரென்றும் வழங்கிவந்தார்கள். ... •



ஸ்ரீமதுபயவே. V. N. வெங்கடவரதாசாரியர் ஸ்வாமி (அட்வகேட்)

முன்னம்ப்ரஸ்தாவித்த ஸ்ரீ T. ரங்காசார்ய ஸ்வாமியின் ஜாமாதாவாகிய இந்த ஸ்வாமி ஞான சீல வயோவ்ருத்தராய் மாமனாருடைய புகழைப் பரிபாலித்துக் கொண்டு எழும்பூர் வேதவிலாஸபவனத்தில் விளங்குகின்றார். இவருடைய பெருமையைச் சுருக்கமாகச் சொல்லில், கோயில் திருமலை பெருமாள்கோயில் என்னும் மூன்று திவ்ய தேசங்களினுடையவும் யோக க்ஷேமங்கள் இவருடைய அதீனமேயாகும். இரண்டு வருடங்களுக்கு முன்பு சதாபிஷேகங் கண்டருளினார். மேன்மேலும் பெருகும் பெரும்புகழுடன் நீடூழிவாழ்க வாழ்க வாழ்கவே.



ஸ்ரீமான் வளவரம் பாஷ்யமையங்காரென்று ப்ரஸித்தரான இந்த ஸ்வாமி சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் பதவியை வஹித்து விச்ராந்தரானபின் ஸ்ரீபெரும்பூதூர் தேவஸ்தான தர்மகர்த்தாவாகப் பல வாண்டுகள் வாழ்ந்து வந்தார். இவர் லௌகிக வித்யையோடு வைதிக வித்யையிலும் நிபுணராயிருந்தார் உபயவேதாந்த க்ரந்தங்களையெல்லாம் வரியடைவே கற்றவர் பரமஸாத்விகர்.

ஸ்ரீமதுபயவே. V. பாஷ்யமையங்கார் (வைகுண்டவாஸி)



ஸாதாரணவாண்டு ஐப்பசித் திருமூலநன்னாளில் திருவெஃகா மாமுனிகளின் திருவீதிப் புறப்பாட்டில் வேதபாராயண கோஷ்டியின் ஒரு பகுதி. 3—11—70.



ஸ்ரீமான் உவே. டாக்டர் V. ராமையங்கார் (சென்னை) பின்புறத்தில் ஸேவை ஸாதிக்கின்ற V. B. ஸ்வாமியின் மூத்த திருக்குமாரரான இவர் சென்னையில் நெடுநாள் டாக்டர் பதவியில் வாழ்ந்தவர். மஹா நிபுணர். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் பஹுச்ருதர்.

Srimath G. Krishnamacharya,

Advocate, Chingleput.



ஸ்ரீமதுபயவே. G. கிருஷ்ணமாசாரியர் ஸ்வாமி, அட்வகேட், செங்கற்பட்டு.

இந்த ஸ்வாமி லௌகிக வித்யா ஸம்பத்தியோடு வைதிக வித்யாஸம்பத்தியும் மலிந்தவர். ஸ்ரீகாஞ்சீ தேவப்பெருமாள் ஸன்னிதி யோக க்ஷேம நிர்வாஹகரென்பது விசேஷித்துக் குறிப்பிடத்தக்கது. ஸௌசீல்யமே வடிவெடுத்தவர்.

— பொலிக பொலிக பொலிக —



ஸ்ரீமத் உபயவேதாந்த வித்வான்—திருமலை அனந்தாண்பிள்ளை. சதாபிஷேக. கோவிந்த நரஸிம்ஹாசாரியர் ஸ்வாமி. திருவரங்கம் பெரியகோயில்.



ஸ்ரீமதுபயவே. பரமார்த்த ஸார்வபௌம. ரிக்யோகி B. [illegible] ஸ்வாமி (கொடிகோவில்—கோயம்புத்தூர்.




திருவரங்கம் பெரியகோயிலில் (ஐம்பது வருடங்களுக்கு முன்பு) ஒரு வைகாசித் திருவிசாகத்தன்று நம்மாழ்வாருடைய திருவீதிப் புறப்பாட்டின் சேவை. இதில் ஸ்ரீரங்கநாராயண ஜீயர் ஆஸ்தானத்தை யலங்கரித்திருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸ அயோத்யா ராமாநுஜ ஜீயர்ஸ்வாமி ஸேவைஸாதிக்கிறார், இப்போது எழுந்தருளியிருக்கிற ஸ்ரீ உவே. அரையர் சடகோபாசார்ய ஸ்வாமியின் மாதாமஹரான பெரிய அரையர்ஸ்வாமி சிரோபூஷணத்துடன் ஸேவைஸாதிப்பது பரமபாக்யம்.




ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி திருமலை திருப்பதி சிறிய கோயில் கேள்வி அப்பன் (வர்த்தமான) ஸ்ரீவிஷ்ணுசித்த ராமாநுஜஜீயர் ஸ்வாமி. பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு.




திருமலை நல்லான் சக்ரவர்த்தி
வெங்கரை ஸ்ரீ உப. வே. ஸ்ரீசைல சக்ரவர்த்தி ஆசார்யர்
(வைகுண்டவாஸி)




ஸ்ரீமதுபயவே. திருமலை அனந்தாண்பிள்ளை.
(குன்றபாக்கம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி
வித்வத்ஸார்வ பௌமர். வைகுண்டவாஸி)



கீழ்த்திருப்பதியில் ஸ்ரீகோவிந்தராஜரோடு மணவாளமாமுனிகள்
ஐப்பசித் திருமூலத்தில் சாத்துமுறை கண்டருளுங் காட்சி.




மணவாளமாமுனிகள்



திருவரங்கம் பெரியகோயில் அரையர் கோஷ்டி. தற்காலம் 'கோயிலில் பெரிய அரையர் ஸ்வாமியென வழங்கப்படுகிற ஸ்ரீமதுபயவே. சடகோபாசாரியர் ஸ்வாமி தமது திருக்குமாரர் நால்வரோடும் ஸேவை ஸாதிக்கிருர்.


பொலிக பொலிக பொலிக.



திருமலை திருப்பதி பெரியஜீயர் ஸ்வாமி
திருக்கண்ணபுரம். (வைகுண்டவாஸி)
(ஸ்ரீபெரும்பூதூரில் (வர்த்தமாந) எம்பார்ஸ்வாமியின்
பூர்வாச்ரமத் திருத்தகப்பனார்,



ஸ்ரீகாஞ்சீ. வாதிகேஸரி.
அழகிய மணவாள ராமாநுஜ ஜீயர்
ஸ்வாமி, (ஷஷ்டி ஜீயரென்று ப்ரஸித்தர்)
ஐம்பது வருடங்கட்கு முன்பு
எழுந்தருளியிருந்தவர்.



ஸ்ரீமதுபயவே. கோயிலண்ணங்கார்ஸ்லாமி

ஸ்ரீரங்காசார்யர்.



ஸ்ரீ உவே. வேதவ்யாஸ
வேங்கடஸுதர்சனபட்டர் ஸ்வாமி
(வைகுண்டவாஸி) ஸ்ரீரங்கம்.




ஸ்ரீஉவே. வேதவ்யாஸ
ரங்கநாதபட்டர் ஸ்வாமி
ஸ்ரீரங்கம்.


## அன்பர்களுக்கு அறிவிப்பு

வைகுண்டவாஸிகளும் வர்த்தமானர்களுமான மஹான்களின் திருவுருவப்படங்களை இன்னும் விசேஷமாக வெளியிட அடியேனுக்கு ஆசையுள்ளது. ஆங்காங்குள்ள ஸஹ்ருதய ஸுஹ்ருந்மணிகளுக்கு அடிக்கடி விஜ்ஞாபன பத்ரிகை எழுதிக்கொண்டு வருகிறேன். இந்த அறிவிப்பின் மூலமாகவும் அவரவர்களுக்கு நினைவூட்டுகிறேன். உகந்தருளின நிலங்களென்னப்படுகிற திவ்யதேசங்களில் மங்களாசாஸனபரர்களாய் வாழும் ஸ்வாமிகளின் திருவுருவப்படங்களை ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறேன்.

தாஸன் P.B.A.



ஆந்திரப்ரதேசம்—நிஜாமாபாத்தில்
1967ல் நடைபெற்ற ஸ்ரீமஹாவிஷ்ணுயஜ்ஞத்தில் உபந்யாஸ கோஷ்டி,



விச்வாவஸு ஸம்வத்ஸர பங்குனி விசாக ஸ்தோத்ரபாட கோஷ்டி.

**மணவாள மாமுனிகளின் அறுநூருண்டு நிறைவு விழாக் கொண்டாட்டத்தின் சார்பாக 25—10—70ல் தர்மப்ரகாச மண்டபத்தில் கூடிய கோஷ்டியில் ஸ்ரீமதுபயவே. திருமலை அனந்தாண்பிள்ளை அக்காரக்கனி ஸம்பத்குமாராசார்ய ஸ்வாமி நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.**




நமது நாட்டில் ஆசார்யர்கள் பலர் தோன்றியிருந்தாலும் எம்பெருமானுர் என்கிற இராமாநுசரும் மணவாளமாமுனிகளும் உலகிற்குச் செய்த உபகாரம் மிகவும் பெரியது. நம் நாட்டில் வேதமே சிறந்த அறநூலாகக் கொண்டாடப்பட்டு வருகிறது; ஆனுல் அதை ஓதவும், அனுட்டிக்கவும் உயர்ந்த ஜாதியில் பிறந்தவர்களைத் தவிர மற்றையோர் அதிகாரிகளல்லர் என்று சொல்லப்பட்டுள்ளது. இது சிலருக்குப் பிடிக்கவில்லை; மனிதனுய்ப் பிறந்த ஒவ்வொருவரும் நன்மையடைய வேண்டியது அவசியமாதலால், யாரோ சிலருக்கு மட்டும் உய்ய வழிவகுப்பது ஸரியல்ல என்று கருதினுர்கள்; அதனுல் அன்னவர்கள் வேதத்தையே உதறித் தள்ளிவிட்டு அவைதிகமான புத்தம், சமணம் போன்ற மதங்களைத் தாபிக்கலானுர்கள். இந்த மதங்களால் வைதிகமதம் மிகவும் தாழ்த்தப்பட்டபோது சங்கராசாரியர் அவதரித்து வேதமே ப்ரமாணமென்று ஸ்தாபித்தார்கள். அவர் உபதேசித்தவழியில் உயர்ந்த ஜாதியில் பிறந்தால்மட்டும் போதாது, உயர்ந்த ஆசிரமத்தை மேற்கொண்டவர்கள்தான் மோக்ஷமடையலாமே யொழிய மற்ற ஜாதியினரும் ஆச்ரமத்தினரும் மோக்ஷம் பெறவே முடியாது. ஆகவே, வேதம் ப்ரமாணந்தான் என்று அவர் சொல்லியும் அதனுல் பயனில்லாமல் போய்விட்டது.

இந்த நிலைமையில் எம்பெருமானார் (ஸ்ரீராமாநுஜர்) அவதரித்து, வேதங்கள் ப்ரமாணமென்று இசைந்து, அது கூறிய சரணாகதி என்னும் வழியைக்காட்டி, அதனால், இன்ன ஜாதி, இன்ன ஆசிரமம் என்கிற வாசியில்லாமல் ஆசையுடையோரெல்லாரும் மோக்ஷமடையலாமென்று உபதேசித்தருளினார். இந்த விஷயங்கள் வேதத்தில் ஆங்காங்கு பொதிந்திருந்தாலும் திவ்யப்ரபந்தங்களில் தான் மலிந்திருப்பதால், அவைகளையே முக்கியமாகக் கொண்டு உபதேசித்துப் போந்து எல்லாரும் உய்யும் வழிகாட்டினவர் மணவாள மாமுனிகள். ஆக, வேதத்தை ப்ரமாணமாக ஒப்புக் கொண்டே எல்லாரும் உய்யும்வழி காட்டினது இவர்களுக்கு அஸாதாரணமானது.



மேலும், மோக்ஷமென்பது இவ்வுடலை விட்டு, பதினான்கு உலகங்களையும் தாண்டிச்சென்று பரமபதமென்கிற சீரிய நாட்டை யடைந்து அங்கு அநுபவிக்கத் தக்கதென்று பொதுவாக எல்லாருமறிந்திருக்க, அது தேவையில்லை யென்றும், இவ்வுலகந்தன்னிலேயே அர்ச்சையில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானையும், அவனடியார்களையும் தொழுது அவ்வின்பத்தை அநுபவிக்கலாமென்று கூறி, இங்கேயே மோக்ஷத்தையும் அளித்த பெருமை இவ்வாசாரியர்களுக்குண்டு. இது ஸாமான்ய ஜனங்கள் அறியக்கூடிய பெருமை. மணவாள மாமுனிகளுக்கு விசேஷித்த பெருமை உபயவேதாந்த ஸாரப் பொருள்களையெல்லாம் தமது ஒப்புயர்வற்ற வியாக்கியான நூல்களினால் எவ்விதமான கலக்கமுமில்லாமலும் ஸந்தேஹமோ விபரீத ஞானமோ உண்டாக இடமில்லாமலும் தேனும் பாலும் அமுதுமாக அருளிச்செய்ததேயாம். இப்பெருமையை கடல்சூழ்ந்த மண்ணுலகில் இதுகாறும் பெற்றவர்களுமில்லை, இனிப் பெறப்போகிறவர்களுமில்லை.







25—10—70 ஞாயிற்றுக்கிழமை காலை சென்னை தர்மப்ரகாச மஹாமண்டபத்திலும் 1—11—70 ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீபார்த்தஸாரதிஸ்வாமி ஸந்நிதித் திருவாய்மொழி மண்டபத்திலும் P.B.A. நிகழ்த்திய இரண்டு உபந்யாஸங்களின் ஸாரம்.

---

## — முதல் உபந்யாஸம்—எம்பெருமானாரும் மணவாளமாமுனிகளும் —

மணவாள மாமுனிகளுக்கு யதிவரபுநரவதாரபூதரென்கிற ப்ரஸித்தியுள்ளது. “ஏராரும்மெதிராசரென வுதித்தான் வாழியே” என்கிற வாழி திருநாமமும் நித்யாநுஸந்தானத்திலுள்ளது. எம்பெருமானாரே மீண்டும் மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்தருளினரென்பதற்குப் பல பொருத்தங்களுள்ளன. அந்த உபபத்திகளை அனைவரும் மறவாமல் சிந்தைசெய்யுமாறும், உபந்யாஸகர்கள் ஆங்காங்கு எடுத்துரைக்க ஸௌகரியமாகுமாறும் அடியேன் ச்லோகபத்தமாக்கி யிருப்பதை முந்துறச் சொல்லி அதனை விரித்துரைக்கக் கேளீர்.

வ்யாக்யாநக்ரந்ததாநாத் பரிவதநகதாகந்தவைதேசிகத்வாத்
நாநாசாஸ்த்ரார்த்தப்ருந்த ப்ரகரபணிதிபி: ப்ராஜ்ஞ ஹ்ருத்ரஞ்ஜகத்வாத்,
பூர்வாசார்யோக்திராகரத் சடரிபுமுநிராட்ஸூக்தி ஸம்வர்த்தகத்வாத்
பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதிகரணாத் திவ்யதேசாபிமாநாத்,
பணிராஜாவதாரத்வாத் ஸ்ரீரங்கஸ்ரீவிவர்த்தநாத்,
யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யக்ருத் த்ருவம்.

## — இதன் பொருட்சுருக்கம் —

1. வ்யாக்க்யாநக்ரந்த தாநாத்—பெரும்பாலும் வியாக்கியானங்களருளிச் செய்வதிலேயே ஊக்கம் எம்பெருமானுர்க்கும் மாமுனிகளுக்கு மொக்கும். ஸ்ரீபாஷ்யம், வேதாந்த தீபஸாரங்கள், கீதாபாஷ்யம் என்னுமிவை வியாக்கியான க்ரந்தங்களேயன்றே. மாமுனிகளின் வியாக்கியான க்ரந்தங்களும் ப்ரஸித்தங்கள். வேதார்த்த ஸங்க்ரஹம் கத்யத்ரயம்—என்று சில மூலக்ரந்தங்களும் ஸ்வாமி ஸாதித்தது போலே மாமுனிகளும் யதிராஜ விம்சதி உபதேசரத்நமாலை முதலிய மூலக்ரந்தங்களுமருளிச் செய்தது ப்ரஸித்தம்.

2. பரிவதநகதாகந்த வைதேசிகத்வாத்—பரிவதநமாவது பர்வாதம்; நிந்தையென்றபடி. ஸ்தாநேயோ அஸ்தாநேயோ நிந்தாபரிஹாஸங்களைத் திரப்பி நூல்களெழுதுவாரு முளரே; அங்ஙனம் நிந்தையையோ பரிஹாஸத்தையோ அணுவளவும் புகவிடாமல் பரமபவித்ர ஸ்ரீஸூக்திகளை யருளுந்தன்மை ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமேயொக்கும்.

3 நாநாசாஸ்த்ரார்த்தப்ருந்தப்ரசுரபணிதிபி: ப்ராஜ்ஞரஞ்ஜகத்வாத்—தொட்ட தொட்ட விடமெங்கும் பலபல சாஸ்த்ரார்த்தத் திரள்களே மலிந்த ஸ்ரீஸூக்திகளினுலே பண்டிதர்களின் உள்ளத்தை உகப்பிக்குந்தன்மையானது ஸ்வாமிக்கும் மாமுனிகளுக்குமேயொக்கும்.

4. பூர்வாசார்யோக்திராகாத்—எம்பெருமானுர் ஸ்ரீபாஷ்யம் தொடங்கும் போதே "பகவத் போதாயந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்ரஹ்மஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யாஸ் ஸஞ்சிக்ஷிபு:, தந்மதாநு ஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யக்க்யாஸ்யந்தே.' என்றருளிச் செய்து பூர்வாசார்யஸூக்திகளில் தமக்குள்ள அபிநிவேசாதிசயத்தை விளங்கக் காட்டியருளினுர். மாமுனிகளும் *முன்னேர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு* என்றும் *முன்னவராம் நங்குரவர் மொழிகள் உள்ளப்பெற்றேம் முழுதும் நமக்கவை பொழுது போக்காகப் பெற்றேம்* என்னுமித்யாதிகளாலே தமக்குள்ள பூர்வாசார்யஸூக்தி பஹுமானத்தைக் காட்டியருளினதோடு நில்லாமல், தம்முடைய வியாக்கியானக்ரந்தங்களைப் பூர்வாசார்ய ஸூக்திமயமாகவே அவதரிப்பித்தருளினுர். இதனுலும் ஒப்புமை.

5. சடரிபுமுநிராட்ஸூக்தி ஸம்வர்த்தகத்வாத்—ஸ்வாமியின் வாழி திருநாமத்திலே *மாறனுரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே* என்று ஓதா நின்றேம். *ஆய்ந்த பெருஞ்சீரார் சடகோபன் செந்தமிழ் வேதந்தரிக்கும் பேராதவுள்ளம் பெற—ஏய்ந்த பெருங் கீர்த்தியிராமானுச முனி தன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன்* என்று அக்காலத்து சிஷ்யவர்க்கங்கள் பணிக்கக் காணு நின்றேம். இதுபற்றி மாமுனிகளின் திறத்திலே சொல்லவேணுமோ? *சேற்றுக் கமல வயல் சூழரங்கர் தம் சீர்தழைப்பப் போற்றித்தொழு நல்லவந்தணர்வாழ விப்பூதலத்தே, மாற்றற்ற செம்பொன் மணவாளமாமுனி வந்திலனேல், ஆற்றில் கரைத்த புளியல்லவோ தமிழாரணமே* என்றவொரு பாசுரம் போதுமே.

6. பீடாதீசப்ரதிஷ்டாபநக்ருதிகரணாத்=ஸ்வாமி எழுபத்து நான்கு ஸிம்ஹாஸநாதிபதிகளை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது ஸுப்ரஸித்தம். • லக்ஷ்மீநாதாக்ய ஸிந்தௌ சடரிபுஜலத: • இத்யாதிச்லோக ரத்னத்தினாலும் இது ஸுவ்யக்தம். மாமுனிகளும் "திரமாக திக்கஜங்களிட்டருளும் பெருமாள்!" என்கிறபடியே அஷ்டதிக் கஜாசாரியர்களை ஸ்தாபித்தருளி அவர்கள் வழியாக தர்சந நிர்வாஹம் செய்தருள்வது நாடு நகரமும் நன்கறிந்தது.

7. திவ்யதேசாபிமாநாத்=(இதற்கு இரண்டு வகையாகப் பொருள்.) • மன்னியதென்னரங்காபுரி மாமலை மற்றுமுவந்திடு நாள் • என்றும், • ஸ்ரீரங்கம் கரிசைல மஞ்ஜநகிரிம் தார்க்ஷ்யாத்ரி ஸிம்ஹாசலெள........ஸாலக்ராமகிரிம் நிஷேவ்ய ரமதே ராமாநுஜோயம் முநி: • என்றும் சொல்லுகிறபடியே ஸ்வாமி ஸகல திவ்யதேசங்களிலும் அபிமானம் காட்டியருளினவர்; மாமுனிகளும் * அடைவுடனே திருப்பதிகள் நடந்த வேர்வையாறவே* என்கிறபடியே திவ்யதேசயாத்திரைகள் செய்தருளி அவற்றில் அபிமானம் காட்டியருளினபடி ஸுப்ரஸித்தம். (அதவா) திவ்யதேசாபிமானமாவது—திவ்யதேசச்ரேணியில் சேராதிருந்த ஸ்தலத்தை திவ்ய தேசமாக அபிமானித்தல். ஸ்வாமி திருநாராயணபுரத்திற்கு • ஒரு நாயகமாய் • என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அத்தலத்தை திவ்யதேசமாக அபிமானித்தருளினதும், மாமுனிகள் ராஜமன்னார் ஸன்னிதிக்கு *தீர்ப்பாரையாமினி* என்கிற திருவாய்மொழியை ஸமர்ப்பித்து அப்பதியை திவ்யதேசமாக அபிமானித்தருளினதும் அநுஸந்தேயம்.

8. பணிராஜாவதாரத்வாத்=ஸ்வாமி சேஷாவதாரமென்பது ஸுப்ரஸித்தம். கருடவாஹன பண்டிதர் பணித்த திவ்யஸூரி சரிதத்திலும், வடுகநம்பி பணித்த யதிராஜ வைபவத்திலும் மற்றும்பல பிரபந்தங்களிலும் இது விசதம். மாமுனிகள், வரவரமுநி சதகத்திலே *துக்தோதந்வத் தவள மதுரம் சுத்தஸத்வைக ரூபம் ரூபம் யஸ்ய ஸ்புடயதிதராம் யம் பணீந்த்ராவதாரம்• என்றருளிச்செய்த படியும் மற்றும் சரித்ரப்ரஸித்தியின்படியும் திருவனந்தாழ்வான் திருவவதார பூதரென்பது ஸுவ்யக்தம்.

9. ஸ்ரீரங்கஸ்ரீவிவர்த்தநாத்=ஸ்வாமி * தென்னரங்கர் செல்வம் முற்றும் திருத்திவைத்தான் வாழியே* என்று எண்டிசையும் வாழ்த்துகிறபடியும், கோயி லொழுகு முதலானவற்றில் காண்கிற இதிஹாஸ விஸ்தாரப்படியும் ஸ்ரீரங்கஸ்ரீயை வளர்த்தருளினவர் என்பது விச்வவிதிதம். மாமுனிகள்திறத்து மிங்ஙனமேயன்றோ? "அரங்கநகரவாழ இன்னுமொரு நூற்றாண்டிரும்" என்றன்றோ நிச்சலும் வாழ்த்து கின்றதுலகம்.

ஆக இத்தன்மைகளாலே, [யதீந்த்ரப்ரவணஸ் ஸாக்ஷாத் யதீந்த்ரோ பாஷ்யக்ருத் த்ருவம்] யதீந்த்ரப்ரவணரென்று திருநாமம் பெற்ற மணவாளமாமுனிகள் ஸாக்ஷாத் எதிராசரேயென்னத் தட்டில்லையென்றதாயிற்று. இங்ஙனே நிர்வஹிக்கக்கூடிய உபபத்திகள் மற்றும் பலவுள. அவற்றை அடியேனுடைய நூல்களிற் காண்க.

## இரண்டாவதான திருவல்லிக்கேணியுபந்யாஸம்

## "தீபக்த்யாதிகுணார்ணவம்"

அழகியமணவாளன் ஆசார்யதனியனாக இட்ட ஸ்ரீசைலேசதயாபாத்ரத் திருமந்த்ரத்தில் இரண்டாவது பாதம் தீபக்த்யாதிகுணார்ணவமென்பது. இதில் ஆதி சப்தத்தாலே விரக்தியைக் கொள்வது ஞான பக்தி விரக்திகளாகிற மூன்றும் ஆசார்யர்களுக்கு இன்றியமையாதனவாம். ஸ்ரீமந்நாதமுனிகளைத் துதிக்கிற ஆளவந்தார் *நமோசிந்த்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞான வைராக்யராசயே, நாதாய முநயே அகாத பகவத்பக்தி ஸிந்தவே * என்கிற சுலோகத்தினால் இம் மூன்றையு மன்றோ அருளிச்செய்தது. மாமுனிகளை ஞானக்கடலாகவும் பக்திக் கடலாகவும் வைராக்யக்கடலாகவும் கண்டறிந்தே நம்பெருமாள் அவரை ஆசார்யராக வரித்துக்கொண்டமை இதனால் விளங்கிற்று. பக்தியானது ஞானத்தையும் வளர்க்கும், வைராக்யத்தையும் விளைக்கும். "பக்த்யா சாஸ்த்ராத் வேத்மி ஜநார்தநம்" என்ற ஸஞ்ஜய வாக்யத்தினால் பக்தி ஜ்ஞானவிவர்த்தக மென்றறிக. *மாற்பால் மனம் சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு *பரமாத்மநி யோ ரக்தோ விரக்த: அபரமாத்மநி* இத்யாதிகளால் பக்தி வைராக்யத்திற்கும் ஜநகமென்பதுணர்க.

இனி அர்ணவமென்று மாமுனிகளைக் கடலாகக் கூறினதற்கேற்ப மாமுனிகளுக்கும் கடலுக்கும் ஸாம்யத்தை எட்டு ப்ரகாரங்களாலே நிரூபித்து இதையும் ச்லோகபத்தமாக்கி உரைசெய்தேன் திருவல்லிக்கேணி ஸந்நிதித் திருவாய்மொழி மண்டபத்தில்.

— அந்த சுலோகம் வருமாறு —

சைலேந்த்ராத்யுஷிதோ மலிந்த்ரபரித: ஸத்வாபகாத்ராங்கித:
மத்ஸ்யாத்யாச்ரித வர்க்கஸேவித பத: காம்பீர்யஸீமாஸ்த்திக:,
காலுஷ்யஸ்ய கதாப்ரஸங்கரஹித: வேலாநதிக்ராந்த் த்ருவம்
ஸோயம் ஸௌம்ய வரோ யதீந்த்ரமுநிராட் ஸேவ்யாத் விபச்சார்ணவ:.

இந்த ச்லோகம் அன்று அங்கு மிக விரிவாக வ்யாக்யானிக்கப்பட்டாலும் இங்குச் சுருக்கமாக விவரிக்கப்படுகிறது.

[1. சைலேந்த்ராத்யுஷித:] கடலுக்கும் மாமுனிகளுக்கும் துல்யமான தன்மை இது பண்டொருகாலத்தில் மலைகளெல்லாம் சிறகுடனே பறந்து நாடு நகரங்களுக்குத் துன்பம் விளைத்துக் கொண்டிருக்கையில் இந்திரன் தனது வஜ்ராயுதத்தினால் அவற்றின் சிறகுகளைத் துணித்துக்கொண்டு வர அப்போது மைநாகம் முதலிய பல மலைகள் கடலிலேயே சென்று ஒளிந்துகொண்டு இன்றைக்கும் அவ்விடத்திலேயே தங்கி யிருப்பதாக நூல்கள் கூறும். வான்மீகி ராமாயணம் ஸுந்தர காண்டத்தின் முதல் ஸர்க்கத்தில் காணும் மைநாக ஹநுமத்ஸம்வாதத்தினாலும் இவ்வரலாறு நன்கு தெரியவரும். கடலுக்கும் கடல்வண்ணனுக்கும் ஒப்புமை.

கூறுகின்ற திருமங்கையாழ்வார் தமது திருமொழியில் அட்டபுயகரப்பதிகத்தில் (பாட்டு 5ல்) "குன்டமலைகளும் மாமணியும் மலர்மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற, அலைகடல் போன்றிவர்" என்றருளிச்செய்ததுங் காண்க. ஆக சைலேந்த்ர அத்யுஷித: என்ற விசேஷணம் கடலுக்குப் பொருந்திற்று. இனி மாமுனிகளுக்கும் இந்த விசேஷணம் பொருந்துமாறு கேளீர். அவர்தமது ஆசார்யர் திருவாய்மொழிப்பிள்ளை. அவர் திருமலையாழ்வாரென்றும் ஸ்ரீசைலேசரென்றும் திருநாமம் பெற்றவர். அவர்தாமே இங்கு சைலேந்த்ரராகக் கொள்ளத்தகுவர். அவர்பக்கலிலே குருகுலவாஸம் செய்தருளினவர் மாமுனிகள் என்றவாறு. ஸமுத்ரபக்ஷத்திலே 'சைலேந்த்ரை: அத்யுஷித:' (கர்மணிக்த:) ஸ்வாமி பக்ஷத்திலே 'சைலேந்த்ரம் அத்யுஷித:' (கர்த்தரிக்தம்) என்று விக்ரஹித்துக் கொள்வது.

[2. மணீந்த்ராபீத:] கடலானது ரத்னாகரமென்று பேர் பெற்றதாகையாலே சிறந்த ரத்னங்கள் நிரம்பியதாம். மணியென்றாலும் ரத்னமென்றாலும் பர்யாயமே. மாமுனிகளும் மணீந்த்ரபரிதரே; எங்ஙனேயென்னில்; இதை இரண்டு வகையாக நிர்வஹிக்கலாம். (1) திருவனந்தாழ்வானை வர்ணிக்கிற ஆளவந்தார் (ஸ்தோத்ர ரத்னத்தில்) "பணாமணி வ்ராத மயூக மண்டலப்ரகாசமானோதர திவ்யதாமநி" என்றருளிச்செய்தபடி பணாமணிமண்டிதரிறே திருவனந்தாழ்வான்; அவ்வாழ்வானுடைய அபராவதாரமான மாமுனிகளும் அங்ஙனேயிருக்கத் தட்டில்லை. (2) ஆர்த்திப்ரபந்தத்தில் மாமுனிகள் தாமே "முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப்பெற்றோம்" என்றருளிச்செய்கையாலே பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தி ரத்னங்கள் தம்முள்ளே நிரம்பப் பெற்றவர். புராணரத்னம் ஸ்தோத்ரரத்னம் மந்த்ரரத்னம் முதலிய பலரத்னங்கள் நிரம்பியவரன்றோ மாமுனிகள்.

[3. ஸத்தாபஸாந்தர்க்கத:] ஸத்தாபஸ:—முநிச்ரேஷ்ட: ; அகஸ்த்ய மஹாமுனி; அவருடைய வயிற்றினுள்ளே புக்கது கடல். அகஸ்த்யமுனிவர் கடலைப் பருகினவரென்பது புராண ப்ரஸித்தம். பாதுகாஸஹஸ்ரத்தில் "விஷ்வக் ஆசாந்த ஸிந்தோ: கும்பீஸம்பவோ:" என்றதும் காண்க. ஆக ஸத்தாபஸ அந்தர்க்கதத்வம் கடலுக்கு ஆயிற்று. இனி மாமுனிகள் திறத்துக் கேளீர்; தைத்திரீய உபநிஷத்தில் தபஸ்ஸாவது என்ன? என்கிற விசாரம் நடைபெற்று "ஸத்யமிதி ஸத்யவசா ராதீதர:. தப இதி தபோநித்ய: பௌருசிஷ்டி:" என்று இருவருடைய பக்ஷத்தைச் சொல்லி, உடனே "ஸ்வாத்யாயப்ரவசநே ஏவேதி நாகோ மௌத்கல்ய:" என்று ஸ்வாத்யாய ப்ரவசனங்கள்தான் தபஸ்ஸென்று மௌத்கல்ய பக்ஷமாகச் சொல்லி, "தத்தி தபஸ் தத்தி தப:" என்று வேத புருஷன் அந்த பக்ஷத்தையே ஸித்தாந்தமாக்கினதாக ஓதியிருக்கையாலே ஸ்வாத்யாய ப்ரவசன நிரதர்களாயுள்ள மஹான்களை ஸத்தாபஸர்களென்கிறது. தேஷாம் அந்தர் கத:, அல்லது தேஷு அந்தர் கத:. அப்படிப்பட்ட ஸத்தாபஸர்களின் உள்ளத்துள்ளே உறைபவர்; (அல்லது) அன்னவர்களில் ஒருவர் மாமுனிகள் என்றபடி, ஸ்வாமி தாமே ஆர்த்திப்ரபந்தத்தில் "பண்டு பலவாரியரும் பாருலகோருய்யப் பரிவுடனே பணித்தருளும் பலகலைகள் தம்மைக், கண்டதெல்லா மெழுதியவை கற்றுணர்ந்தும்

பிறர்க்குக் காதலுடன் கற்பித்துங் காலத்தைக் கழித்தேன்" என்று தம்முடைய ஸ்வாத்யாய ப்ரவசந நிரதத்வத்தை யருளிச்செய்தது இங்கு அநுஸந்தேயம்.

[4. மத்ஸ்யாத்மாச்ரிதவர்க்க நிஷேவிதபத:] ஸமுத்ரபக்ஷத்திலே பொருள் கேளீர்; தன்னுள்புகுவதற்கு மத்ஸ்யாவதாரம் செய்த பகவான் மத்ஸ்யாத்மா எனப்படுவன்; அவனுடைய பக்தவர்க்கங்கள் தேவர்களும் முனிவர்களுமாவர். அன்னவர்கள் வந்து கூக்குரலிடும்படியான ஸ்தானத்தை யுடையது கடல். அவதாரகந்தமன்றோ கடல். அவதரிப்பதற்குறுப்பாக பகவத் பக்தர்கள் வந்து பணியுமிடம் கடல் என்றதாயிற்று. இனி மாமுனிகள்பக்ஷத்தில் கேளீர். உபதேசரத்தினமாலையில் "ஆசாரியன் செய்த வுபகாரமானவது, தூய்தாக நெஞ்சுதன்னில் தோன்றுமேல்—தேசாந்தரத்திலிருக்க மனந்தான் பொருந்தமாட்டாது" என்றும், "ஆசாரியனைப் பிரிந்திருப்பாரார்?" என்றும் அருளிச்செய்தவற்றைச் சிந்தித்து ஆசார்ய விச்லேஷத்தில் நீரைவிட்டுப் பிரிந்த மீன்போலே துடிக்குமவர்களான அஷ்டதிக்கஜாதி சிஷ்யர்கள் அடிபணியப் பெற்றவர் மாமுனிகள் என்க.

[5. காம்பீர்யஸீம்நி ஸ்திந:] கடலானது "ஸமுத்ர இவ காம்பீர்யே" என்னும் படியாக காம்பீர்யத்திற்கு எல்லைநிலமாயிருக்கும். "ஆழ நெடுங்கடல் சேர்ந்தான்" (திருவாய்மொழி) என்னும்படியானதன்றோ கடல். மாமுனிகளின் காம்பீர்யாதிசயம் அவர்தம்முடைய திவ்யஸூக்திகளில் அறியத்தக்கதாகும். ஸ்ரீஸுதர்சந பட்டர் ஸ்ரீபாஷ்யத்தைப்பற்றி யருளிச்செய்கையில் "பாஷ்யகுஞ்சேத் ஸ்வயம் யதிபதிர் வ்யாக்க்யாநவாசாம் ததா காம்பீர்யாத்" என்றருளிச்செய்தார்; அந்த காம்பீர்யத்தையும் அதிசயித்த காம்பீர்யமுடையனவன்றோ மாமுனிகளின் திவ்யஸூக்திகள். இதுதன்னை அஸ்மத்குலகூடஸ்தரான ப்ரதிவாதிபயங்கராசார்யர் தாம் பணித்த வரவரமுநி சதகத்திலே "ஸௌராஹாராஸாரசரணசண யத்ஸூக்திலஹரீகரீயஸ்தாம் ஸ்தோதும் ப்ரபவதி ந வாசஸ்பதிரபி" இத்யாதிகளான பற்பல சுலோகங்களினால் வெளியிட்டருளினர்.

[6. காலுஷ்யஸ்ய கதாப்ரஸங்கரஹித:] கடல் கலங்குவதற்கு ப்ரஸக்தியே கிடையாதென்பது ப்ரஸித்தம். "கலங்க முந்நீர்கடைந்தமுதங்கொண்டு" என்று திருமங்கையாழ்வார் கடல்கலங்கியதாகக் கூறினது ஔபாதிகம்; கலங்காமையே கடலுக்கு இயல்வு. மாமுனிகள் எந்த சாஸ்த்ரார்த்தத்திலும் தெளிந்த சிந்தையராகையாலே எதிலுங் கலங்க ப்ரஸக்தியற்றவர். சிலபண்டிதர்கள் தாம் கலக்கமே வடிவெடுத்தவர்களாயிருந்து அதைத் தாம் தெரிந்துகொள்ளாமல பிறர் கலங்கியிருப்பதாக நினைத்து "சிலர் இங்ஙனே கலங்குவர்கள், அவர்களைத் தெளிவிக்கிறோம்" என்றும், "கலக்கத்தை சமிப்பிக்கிறோம்" என்றும் எழுதிப் போருவர்கள். ஸ்வாமி மாமுனிகள் அங்ஙனன்றிக்கே "செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்—ஐப்பசியில் திருமூலமதெனுநாளே" என்று வாழ்த்தும்படி தம்முடைய ஸ்ரீஸூக்திகளினால் அனைவரும் கலக்கந் தீர்ந்து தெளிவு பெறும்படி யன்றோ செய்தருளினவர். ரஹஸ்யவ்யாக்க்யானங்களில் மாமுனிகள் சர்ச்சித்து


நிஷ்கர்ஷித்தாரென அர்த்தங்களென்றால் அவற்றுக்குத் தனிப்பட்ட ஏற்றமன்றோ வுள்ளது. அவரைப்போல் தெளிந்த சிந்தையரான ஆசிரியர் வேறொருவரில்லையே.

[7. (வேலாந்த:] கடலானது கரையைக் கடவாதது. ஆறு குளம் ஏரி முதலானவை ஸமய விசேஷங்களில் கரைகடந்து இடிந்து ஒசிந்து பெருகுவதைக் காணுநின்றோம். இத்தன்மையைக் கடலினிடத்தில் எங்கும் காணகில்லோம். "ராஜ்யஞ்ச தவ ரக்ஷேயம் அஹம் வேலேவ ஸாகரம்" என்றாப்போலே வேலையைக் கடவாதே யிருக்கும் கடல். "முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்டுப் பின்னோர்ந்து தாமதனைப் பேசுபவராய், "பொய்யிலாத மணவாளமாமுனி புந்திவாழி" என்று வாழ்த்தப்படுபவரான மணவாளமாமுனிகள் ச்ருதீதிஹாஸபுராணங்களும் ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளுமாகிற நூல்களின் வரம்பை அணுமாத்திரமும் கடவாதே ஸ்ரீஸூக்திகளருளிச்செய்தவரென்னுமிடத்தை இன்றாக நாம் விரித்துரைக்க வேணுமோ?

[8. த்ருவ:] கடல் என்றுமுள்ளது. உலகமெல்லாமழிந்தாலும் "பாரெல்லாம் நெடுங்கடலேயான காலம்" (பெரிய திருமொழி) என்னும்படி கடல் அழியாதன்றோ. அப்படியே மணவாளமாமுனிகளும் "அடியார்கள்வாழ அரங்க நகர்வாழ ........கடல் சூழ்ந்த மண்ணுலகம்வாழ மணவாளமாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்" என்னும்படி "காருள்ளளவும் கடல் நீருள்ளளவும் வேதமுள்ளளவும் வேதகீதனுள்ளளவும் நித்யஸ்ரீர் நித்ய மங்களமாக விளங்கிநிற்பர். •

ஸ்ரீமதே ரம்யஜாமாத்ருமுநீந்த்ராய மஹாத்மநே,
ஸ்ரீரங்கவாஸிநே பூயாத் நித்யஸ்ரீர் நித்யமங்களம்.


---




அன்பர்காள்! இங்கு விவரிக்கப்பட்ட அடியேனுடைய ச்லோகமானது இன்னும் பலபல விசேஷங்களைப் பற்றிக் கொள்ளும். மாமுனிகளின் பெருமைக்கடல் முழுவதும் இந்த அர்ணவச்லோகத்தில் 5, 6, 7 லக்கமுள்ள விசேஷணங்களில் அடங்கியுள்ளது. ஈண்டு சுருக்கமாக வியாக்கியானித்தபடி.

# தூத்துக்குடியில் அருளிச்செயல் கோஷ்டி.

தூத்துக்குடியில் ஸ்ரீமான் V. S. அழகிரிஸாமி செட்டியென்பவர் மிக





உயர்ந்த வைஷ்ணவ குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய ஸஹோதரர்களும் புதல்வர்களும் அவரைப் போலவே அவர்க்கும் மேலாகவே ஆசார்ய பக்தியும் ஸம்பிரதாய ச்ரத்தையும் மிக்கவர்களாய் நன்கு விளங்கிவருகிறார்கள். முன்னம் பிரஸ்தாவித்த அழகிரிசாமி செட்டியாரவர்கள் சென்ற ஸௌம்ய ௵ ஐப்பசித் திங்களில் ஆசாரியன் திருவடி சேர்ந்தார். அவருடைய வருஷாந்தத் திதியை ஸம்பிரதாய முறைப்படி நடத்திவைக்கப்பெறக் கருதிய தம்பிமார்களும் புதல்வர்களும் ஆழ்வார் திருநகரியிலிருந்து அத்யாபக ஸ்வாமிகளை வருவித்து அருளிச்செயல் ஸேவையை அற்புதமாக நடத்திவைத்துத் தங்களுடைய ஆஸ்திக்யத்தை உலகறியச் செய்தார்கள். இந்த விலக்ஷண கோஷ்டியை முன்னின்று நடத்திவைத்தவர் ஸ்ரீமது [illegible]. ஸ்ரீஸூக்தி ரத்னாகரம் இளையவில்லி சடகோபாசார்ய ஸ்வாமியாவார். அவர் இந்த கோஷ்டியில் தலைவராக ஸேவை ஸாதிக்கிறார். ...




முன்னம் ப்ரஸ்தாவித்த தூத்துக்குடி கோஷ்டியின் தொடர்ச்சியே யிவையும். இவ்விரண்டு உருவப் படங்களிலும் ஸ்ரீஸூக்தி ரத்நாகர ஸ்வாமியின் திருவருள் நோக்கத்திற்கு இலக்காகி நிற்பவர்கள் மேலே குறித்த ஆஸ்திக குடும்பத் தலைவர்களாவர்.

நமது ஆசாரியர்களின் அரியபெரிய க்ரந்தங்களில் "இந்தளத்திலே தாமரை பூத்தாற்போலே" என்னுந் திருவாக்கு ப்ரஸித்தமாக வுள்ளது. அதனை நினைவூட்டும் இக் குடும்பஸ்தர்கள் நீங்காத செல்வம் நிறைந்து நல்லபதத்தால் மனைவாழ்க.




தூத்துக்குடியில் அருளிச்செயல் கோஷ்டி.




திருநாங்கூரில் தை அமாவாஸ்யை யுத்ஸவத்தில்
ஆழ்வார் மங்களாசாஸன கோஷ்டி—1966.



ஸ்ரீமதுபயவே. திருவாய்மொழிப்பிள்ளை ஸ்ரீசைலாசார்யஸ்வாமியும்
அவரது திருக்குமாரரும்—ஆழ்வார்திருநகரி.



ஸ்ரீரங்கம் வ்ருத்தரத்னம். உபயவே.
எம்பார். ஜடாவல்லப வேங்கடாசாரியர்ஸ்வாமி.
(வைகுண்டவாஸி)



ஸ்ரீரங்கம் வ்ருத்தரத்னம். உபயவே. எம்பார்.
ஜடாவல்லப அப்ரமேயாசார்யஸ்வாமி
மைஸூர் ஸம்ஸ்தான வித்வான் (வைகுண்டவாஸி)